## சிறப்புக்குறிப்பு 13

## முக்கிய பொருளாதாரக் கொள்கை மாற்றங்களும் வழிமுறைகளும் 2008[1/]

### உண்மைத்துறை

01 பெப்புருவரி 2008 - பயணிகள் பேரூந்துக்கட்டணங்கள் சராசரியாக 4.6 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டது.

30 மார்ச்சு 2008 - மின்வலுத் தீர்வையானது சராசரியாக 35 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டது.

21 ஏப்பிறல் 2008 - பால் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பால் மற்றும் வேளாண்மை பயிர் பதனிடல் கைத்தொழில்களில் ஈடுபட்டுவரும் சிறிய அளவில் வேளாண்மை செய்பவர்களை ஊக்குவிப்பதனை இலக்காகக் கொண்டு “வேளாண்மை, விலங்கு வளர்ப்பு அபிவிருத்திக்கடன்”என்ற தலைப்பிலான மானிய அடிப்படையிலான கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

25 மே 2008 - பெற்றோலிய விலை மாற்றத்திற்கு அமைவாக தனியார் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச்சபை என்பவற்றின் பயணிகள் பேரூந்துக் கட்டணங்கள் சராசரியாக முறையே 27 சதவீதத்தினாலும் 17 சதவீதத்தினாலும் அதிகரிக்கப்பட்டது.

01 யூன் 2008 - புகையிரதக் கட்டணங்கள், இலங்கைப் புகையிரதத்தினால் நிர்ணயிக்கப்பட்ட நான்கு வலயங்களுக்கிடையில் வேறுபட்ட அளவுகளில் அதிகரிக்கப்பட்டது.

01 யூலை 2008 - புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் மற்றும் குருஷி நவோதயா திட்டம் என்பவற்றுக்கான கடன் வழங்கல் வீதம் 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது.

20 செத்தெம்பர் 2008 - இரத்தினக்கல் மற்றும் ஆபரணத்துறைக்கான விசேட கடன் உத்தரவாதத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

12 நவெம்பர் 2008 - பெற்றோலிய விலைக்குறைப்புக்கு அமைவாக பயணிகள் பேரூந்துக் கட்டணங்கள் 17.2 சதவீதத்தினால் குறைக்கப்பட்டன.

01 திசெம்பர் 2008 - மாதமொன்றுக்கு 90 அலகுகளுக்குக் குறைவாக மின்வலுவைப் பயன்படுத்தும் நுகர்வோருக்கு ரூபா 30 பெறுமதியான மாதாந்தக் கழிவு வழங்கப்பட்டது.

- ரூபா 20 இற்கும் அதிகமான புகையிரதக் கட்டணங்கள் 10 சதவீதத்திற்கும் 17 சதவீதத்திற்குமிடையிலான அளவில் குறைக்கப்பட்டன.

06 சனவரி 2009 - பயணிகள் பேரூந்துக் கட்டணங்கள் 4 சதவீதத்தினால் குறைக்கப்பட்டன.

09 சனவரி 2009 - இலங்கை மின் சபையால் சுற்றுலா விடுதிகள் மற்றும் கைத்தொழில்களுக்கு அறவிடப்படும் எரிபொருள் சீராக்கத் தீர்வை 2009 சனவரியிலிருந்து நவெம்பர் வரையான காலப்பகுதிக்கு நீக்கப்பட்டது.

**அடுத்து வருபவை**

- மோதல்களால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வறுமையை ஒழிப்பதை நோக்காகக் கொண்ட வறுமை ஒழிப்பு நுண்பாக செயற்றிட்டம் கட்டம் IIஐ நடைமுறைப்படுத்தல்.
- நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான அனைத்தையுமுள்ளடக்கிய கடன் உத்தரவாதத் திட்டத்தை அறிமுகப்படுத்தல்.

### வெளிநாட்டுத்துறை

**வர்த்தகமும் தீர்வையும்**

01 சனவரி 2008 - சுங்கத் தீர்வை மீதான மேலதிகக் கட்டணம் 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது.

09 சனவரி 2008 - பத்து அத்தியாவசிய உணவுப் பொருள் இறக்குமதியின்போது சுங்கத்தில் விதிக்கப்படும் சுங்கத் தீர்வை, பெறுமதிசேர்வரி, துறைமுக வானூர்தி நிலையத் தீர்வை, சமூகப் பொறுப்பாண்மை வரி மற்றும் ஏனைய கட்டணங்களுக்குப் பதிலாக ஒரே தீர்வையாக விசேட பண்டத் தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டது.

03 ஏப்பிறல் 2008 - தாவர எண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய் இறக்குமதியின்மீது 23 சதவீத தீர்வைச் சலுகை வழங்கப்பட்டது.

01 மே 2008 - ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பத்து உணவுப் பொருட்களுக்கு மேலதிகமாக பால்மா இறக்குமதியின்மீது விசேட பண்டத் தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டது.

- இலங்கைக் கொடியின்கீழ் பதிவு செய்யப்பட்ட கப்பல்கள் மற்றும் வர்த்தக விமானங்கள் துறைமுக வானூர்தித் தீர்வையில் இருந்து விலக்களிக்கப்பட்டது.

25 மே 2008 - பெற்றோல் இறக்குமதியின்மீது வழங்கப்பட்டிருந்த லீற்றருக்கு ரூ.20 என்ற தீர்வைச் சலுகையானது நீக்கப்பட்டது.

25 யூலை 2008 - தாவர எண்ணெய் மற்றும் தேங்காயெண்ணெய் இறக்குமதிகளின் மீது வழங்கப்பட்டிருந்த தீர்வைச் சலுகையானது 23 சதவீதத்திலிருந்து 13 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

25 ஓகத்து 2008 - அரிசி இறக்குமதிக்கான சுங்கத் தீர்வை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

[1/] இது 2008ஆம் ஆண்டு மற்றும் 2009ஆம் ஆண்டு முதல் மூன்று மாதங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய பொருளாதார கொள்கை மாற்றங்கள் மற்றும் அளவீடுகளை உள்ளடக்குகின்றது. அறிவிக்கப்பட்டு 2009இல் நடைமுறைப்படுத்தப்பட இருக்கும் கொள்கை மாற்றங்கள் மற்றும் அளவீடுகளும்கூட உள்ளடக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 16 செத்தெம்பர் 2008 | - | உருளைக்கிழங்கு மீதான விசேட பண்டத் தீர்வையானது கிலோகிறாம் ஒன்றுக்கு ரூ.15 இலிருந்து ரூ.20 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| | - | பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதிகளின் மீது முறையே லீற்றருக்கு ரூ.15 மற்றும் ரூ.10 என்றளவில் செஸ் வரி விதிக்கப்பட்டது. |
| 07 நவெம்பர் 2008 | - | கோதுமைத் தானியத்தின் மீதான இறக்குமதித் தீர்வை 6 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. |
| | - | சீனி இறக்குமதி மீதான விசேட பண்டத் தீர்வை கிலோகிறாமொன்றுக்கு ரூபா 14 இலிருந்து கிலோகிறாமொன்றுக்கு ரூபா 16 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| | - | இறக்குமதி செய்யப்பட்ட பால்மா மீதான விசேட பண்டத் தீர்வை கிலோகிறாமொன்றுக்கு ரூபா 5 இலிருந்து கிலோகிறாமொன்றுக்கு ரூபா 15 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| | - | கோதுமைமா மற்றும் மிளகு, வனிலா,கராம்பு, ஏலம் என்பவற்றின் தெரிவு செய்யப்பட்ட வகைகளின்மீது 5 சதவீத செஸ் வரியொன்று விதிக்கப்பட்டது. |
| | - | உளுந்து, குரக்கன், எள்ளு, வீட்டுப் பாவனை மற்றும் அலவலகத் தளபாடம் மற்றும் பாத்திரம் கழுவும் இயந்திரங்கள் என்பவற்றின் இறக்குமதி மீது 15 சதவீத செஸ் வரி விதிக்கப்பட்டது. |
| | - | இறக்குமதி செய்யப்பட்ட இறப்பர் பாலுக்கு கிலோகிறாமொன்றுக்கு ரூபா 35 செஸ் வரியொன்று விதிக்கப்பட்டது. |
| | - | இறக்குமதி செய்யப்பட்ட தேயிலைமீது கிலோகிறாமொன்றுக்கு ரூபா 4 ஆன செஸ் வரியொன்று விதிக்கப்பட்டது. |
| | - | இறக்குமதி செய்யப்பட்ட சோளத்தின் மீதான செஸ்வரி 20 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | தெரிவு செய்யப்பட்ட மரக்கறி வகைமீது 20 சதவீத அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூபா 25ஆன செஸ் வரி விதிக்கப்பட்டது. |
| | - | பொலித்தீன் மற்றும் பிளாத்திக்கு மீதான செஸ்வரி 1 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | தெரிவு செய்யப்பட்ட பழவகைகள் மீதான செஸ்வரி கிலோக் கிறாமொன்றுக்கு ரூபா 40இலிருந்து கிலோகிறாமொன்றுக்கு ரூபா 60 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| | - | இறக்குமதி செய்யப்பட்ட குளிர்சாதனப் பெட்டிகள் மீதான செஸ்வரி 15 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | சாக்கலேட்டுகள் மற்றும் விசுக்கோத்துக்கள் என்பனவற்றின் மீதான செஸ்வரி 30 சதவீதத்திலிருந்து அல்லது கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 40 இலிருந்து 35 சதவீதத்திற்கு அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூபா 60இற்கு இவற்றில் எது அதிகமானதோ அந்த வீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | சேலைகள் மீதான செஸ் வரியானது 30 சதவீதத்திலிருந்து அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூபா 60 இலிருந்து 30 சதவீதத்திற்கு அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூபா 75 இற்கு இவற்றில் எது அதிகமானதோ அந்த வீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | ஆயுர்வேத மூலிகை உற்பத்திகள் மீதான செஸ்வரி 30 சதவீதத்திலிருந்து 35 சதவீதத்திற்கு அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூபா 200 இவற்றுள் அதிகமானதற்குத் திருத்தியமைக்கப்பட்டது. |
| | - | தெரிவு செய்யப்பட்ட வர்ணப்பூச்சுக்கள் மீதான செஸ்வரி கிலோகிறாமொன்றுக்கு ரூபா 75 இலிருந்து கிலோகிறாமொன்றுக்கு ரூபா 85 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | இறக்குமதி செய்யப்பட்ட உப்பின் மீது கிலோகிறாமொன்றுக்கு ரூபா10 ஆன செஸ் வரி விதிக்கப்பட்டது. |
| | - | பாதணிகளின் இறக்குமதி மீதான செஸ்வரி 25 சதவீதத்திலிருந்து அல்லது சோடியொன்றுக்கு ரூபா 300இலிருந்து 30 சதவீதத்திற்கு அல்லது சோடியொன்றுக்கு ரூபா 400 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| | - | இறக்குமதி செய்யப்பட்ட சீமெந்தின்மீது 10 சதவீத செஸ் வரி விதிக்கப்பட்டது |
| | - | ஆபரணங்கள் மற்றும் அவற்றின் பகுதிகள் மீதான செஸ்வரி 15 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| | - | தேயிலைப் பொதிகள் மற்றும் தேயிலைப் பைகள் என்பன ஏற்றுமதி செஸ் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன. |
| | - | செம்பு, வெள்ளி போன்ற மூலப் பொருட்கள் மற்றும் தோல் உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருட்கள் என்பன இறக்குமதித் தீர்வை மற்றும் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன. |
| | - | தெரிவு செய்யப்பட்ட இடைநிலைப் பொருட்கள், பொதி செய்யும் மூலப் பொருட்கள், மூலப் பொருட்கள் மற்றும் இலங்கை மின் சபையால் நடைமுறைப்படுத்தப்படும் கொடையாளிகளால் நிதியிடப்படும் செயற்றிட்டங்கள் என்பன சுங்கத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டன. |
| | - | இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழான எஞ்சியுள்ள பட்டியலிலுள்ள பொருட்களுக்கான சுங்கத் தீர்வை விலக்களிக்கப்பட்டது. |
| | - | பாக்கித்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின்கீழ் கட்டம் கட்டமாக வெளியேறும் பட்டியலிலுள்ள பொருட்களைப் பொறுத்தவரை 20 சதவீத முன்னுரிமை நிரல் விலக்களிக்கப்பட்டது. |
| | - | காகிதம் மற்றும் காகித அட்டைகள், அரைப்பதற்கான இயந்திரங்கள், விதைகள் மற்றும் தானியம், சுத்திகரிக்கப்படாத பருத்தியினால் நெய்யப்பட்ட துணிகள் மற்றும் வலுவைச் சிக்கனப்படுத்தும் ஒளிகாலும் விளக்குகள் என்பனவற்றிற்கு சுங்க வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | - | பொலியெஸ்ரர்கள் மீதான சுங்கத் தீர்வை 2.5 சதவீதத்திலிருந்து 6 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | டயர்கள் (பார ஊர்திகள், மோட்டார் கார்கள் போன்றவற்றிற்குப் பயன்படும்) மீதான சுங்கத் தீர்வை 28 சதவீதத்திற்கு அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூ.90இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | கருப்பஞ்சாறு மீதான சுங்கத் தீர்வை கிலோகிறாமொன்றுக்கு ரூபா 10 இலிருந்து கிலோக்கிறாமொன்றுக்கு ரூபா 12 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| | - | சீமெந்து மீதான சுங்கத் தீர்வை 15 சதவீதத்திலிருந்து 6 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| | - | குளிரேற்றிகள் மீதான சுங்கத்தீர்வை 15 சதவீதத்திலிருந்து 28 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | மரண ஊர்வல வண்டிகளுக்கும் வாயுவினால் இயங்கும் முச்சக்கர வண்டிகளுக்கும் உருளையின் இயலளவு மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட ஆண்டின் அடிப்படையில் இறக்குமதியின் மீதான கலால் தீர்வை விதிக்கப்பட்டது. |
| | - | பெற்றோல் லீற்றரொன்றுக்கு ரூபா 10, டீசல் லீற்றரொன்றுக்கு ரூபா 5 மற்றும் கோதுமைத் தானியத்திற்கு 5 சதவீத சுங்கத் தீர்வைச் சலுகை வழங்கப்பட்டது. |
| 19 நவெம்பர் 2008 | - | பெற்றோல் இறக்குமதிகளின்மீது வழங்கப்பட்ட சுங்கத் தீர்வைச் சலுகை இடைநிறுத்தப்பட்டது. |
| 02 திசெம்பர் 2008 | - | டீசல் மற்றும் கோதுமைத் தானியத்தின் இறக்குமதி மீது வழங்கப்பட்ட சுங்கத் தீர்வைச் சலுகை இடைநிறுத்தப்பட்டது. |
| 03 திசெம்பர் 2008 | - | சமையல் எண்ணெய் (சோயா அவரை எண்ணெய், ஒலிவ் எண்ணெய், தாவர எண்ணெய் போன்றன) மீதான சுங்கத் தீர்வை அதிகரிக்கப்பட்டது. |
| 01 சனவரி 2009 | - | துறைமுக வானூர்தி நிலைய அபிவிருத்தித் தீர்வை 3 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | சில வகைப் பெற்றோலிய எண்ணெய்கள் மற்றும் பிட்டுமினஸ் கனிமங்களிலிருந்து பெறப்படும் எண்ணெய்கள், மசகெண்ணெய், உயிரின இரசாயனங்கள், மருந்துகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட வெளித்தள்ளும் வரையும், நெசவு நெய்யும், பின்னும், தைக்கும், அழுத்தும் இயந்திரங்கள் போன்றவற்றுக்கு சலுகை துறைமுக, வானூர்தி நிலையத் தீர்வையாக 2 சதவீதம் விதிக்கப்பட்டது. |
| | - | அன்ரினயோ பிளாத்திக்கு மற்றும் இமுனோசப்பிறசிவ் வைரங்கள், இரத்தினக்கற்கள், வெள்ளி, தங்கம், பிளாற்றினம் போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட வகைகள் துறைமுக மற்றும் வானூர்தி நிலைய அபிவிருத்தித் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டன. |
| 21 சனவரி 2009 | - | பால்மா இறக்குமதியின் மீதான விசேட பண்டத்தீர்வை 15 சதவீதத்திலிருந்து 35 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |

**வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்**

| | | |
|---|---|---|
| 29 மே 2008 | - | இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதியாளர்கள் தமது வர்த்தகத் தேவைகளுக்காக, வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல்களை ஒரு வர்த்தக வங்கியால் பராமரிக்கப்பட்டுவரும் விசேட வெளிநாட்டு நாணய கணக்கினூடாக தடையின்றி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். |
| 02 யூன் 2008 | - | வெளிநாட்டுப் பிரசைகள், இலங்கைக்கப்பால் வதியும் இலங்கைப் பிரசைகள், வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் மற்றும் இலங்கைக்கு வெளியே செயற்படும் நிறுவனங்களிடம் இருந்து நிதியினைத் திரட்டுவதற்கு வெளிநாட்டு நாணயம் மற்றும் ரூபாய் ஆகிய இரண்டிலுமான ஒரு விசேட வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கு என்ற பெயரிலான ஒரு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 02 யூலை 2008 | - | ஏற்கனவேயுள்ள வதிவற்றோர் தடுத்து வைத்தல் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ள 2008 யூலை 1ஆம் நாளில் உள்ளவாறான அனைத்து வெளிநின்ற மொத்த நிலுவைகளும் கணக்கு வைத்திருப்போருக்கு அல்லது அவரின் சட்ட ரீதியான நன்மை பெறுநருக்கு விடுவிப்பதற்கு அல்லது வெளியில் அனுப்புவதற்கு அனுமதிக்கப்பட்டன. |
| | - | ஏற்கனவேயுள்ள தடுத்து வைக்கப்பட்ட கணக்குகளில் அல்லது புதிதாகத் திறக்கப்பட்ட கணக்குகளில் 2008 யூலை 1ஆம் திகதிக்குப் பின்னர் வைப்புச் செய்யப்பட்டவற்றிலிருந்து ஆண்டொன்றுக்கு ஆகக்கூடியது ஐ.அ.டொலர் 20,000இற்குச் சமனான தொகையினை வெளியிலனுப்பும் பொருட்டு விடுவிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. |
| | - | இலங்கையிலிருந்து குடியகல்வினை மேற்கொள்வோர் இலங்கையைவிட்டு வெளியேறும்போது வழங்கப்படக்கூடிய வெளிநாட்டுச் செலாவணியின் பெறுமதியானது ஒவ்வொரு குடும்பத்திற்கும் அல்லது குடும்பத்துடன் செல்லாத தனிப்பட்டவருக்கும் ரூபா 1 மில்லியனிலிருந்து அண்ணளவாக 1.5 மில்லியனாக (ஐ.அ.டொலர்கள் 150,000) அதிகரிக்கப்பட்டது. |
| 10 யூலை 2008 | - | "எனது கனவு இல்லத் திட்டம்" என்ற திட்டத்தின்கீழ் வயதான வெளிநாட்டுப் பிரசைகளுக்கு வதிவிட அனுமதியினை வழங்கி உதவும் அரசாங்கத்தின் முடிவின் அடிப்படையில் வெளிநாட்டு வயதானோர் நிலையான வைப்புக் கணக்கு (55 வயதிற்கு மேற்பட்டோருக்கு) என்றதொரு வெளிநாட்டு நாணய வைப்புத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 11 யூலை 2008 | - | வெளிநாட்டிற்குப் பயணிக்கும் இலங்கையர்களுக்கு பயணப்படியின் ஒரு பகுதியாக வழங்கப்படும் வெளிநாட்டு நாணயத் தாள்களின் வழங்கல் ஐ.அ.டொலர் 1000 இலிருந்து ஐ.அ.டொலர் 2000 அல்லது அதற்குச் சமனான வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட பெறுமதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 26 ஓகத்து 2008 | - | 1953ஆம்ஆண்டு 24ஆம் இலக்க நாணயக் கட்டுப்பாட்டுச் சட்டம் பிரிவு 7(அ)இன் ஏற்பாடுகளின்படி இலங்கைக்கு |

| | | |
|---|---|---|
| | | வெளியே வதியும் நபர்கள் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளைக் கொள்வனவு செய்வதற்குரிய கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் நாணயக் கட்டுப்பாட்டுச் சட்டம் பிரிவு 11(2) மற்றும் 17(2)இன் ஏற்பாடுகளின்படி நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை இலங்கைக்கு வெளியே வதியும் நபர்களுக்குக் கைமாற்றுவதற்கும் அத்துடன் அத்தகைய பன்னாட்டு முறிகளை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடையே வியாபாரம் செய்வதற்குமான அனுமதி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்டது. |
| 04 நவெம்பர் 2008 | - | வெளிநாட்டுப் பயண நோக்கத்திற்காக ஐ.அ.டொலர் 5000 அல்லது அதற்குச் சமனான வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட பெறுமதியிலும் அதிகமான நாணயமாற்றை மேற்கொள்ளும் அதிகாரமளிக்கப்படட வணிகர்களுக்கான அறிக்கையிடும் தேவைப்பாடு நாணயக் கட்டுப்பாட்டாளரால் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 03 திசெம்பர் 2008 | - | வதிவுள்ள வெளிநாட்டு நாணயக் கணக்கை ஆரம்பிப்பதற்கான ஆகக் குறைந்த தேவைப்பாடு தற்போதைய மட்டமான ஐ.அ.டொலர் 500 அல்லது இதற்குச் சமனான வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட பெறுமதியிலிருந்து ஐ.அ.டொலர் 100 அல்லது அதற்குச் சமனான வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட பெறுமதிக்குக் குறைக்கப்பட்டது. |
| | - | வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு வைத்திருப்போரின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களால் வதிவற்றோர் நாணயக் கணக்கில் வரவு வைப்பதற்கான அனுமதி தொடர்பாக விதிக்கப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 1000 என்ற வரையறை நீக்கப்பட்டு நெருங்கிய குடும்ப உறுப்பினர்களால் வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கில் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட எவ்வளவு பெறுமதியான தொகையும் வரவு வைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது. |
| 08 திசெம்பர் 2008 | - | முன் கொடுப்பனவு நிபந்தனைகளுக்கு எதிராக இறக்குமதியாளரால் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் மொத்த விலைப்பட்டியல் பெறுமதியில் 100 சதவீத அளவுத் தேவைப்பாடு பணவனுப்பல்களை அனுப்பும் போது விதிக்கப்பட்டது. |
| 01 பெப்புருவரி 2009 | - | உள்வரும் பணவனுப்பல்களை மேம்படுத்தும் பொருட்டு வதிவுள்ளோர்வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு என்பவற்றுக்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களால் செலுத்தப்படும் வட்டியின்மீது இலங்கை ரூபாவிலான 20 சதவீத மேலதிக வட்டியானது 2009 பெப்புருவரி 01 இலிருந்து இலங்கை அரசாங்கத்தால் செலுத்தப்படுகின்றது. |

## இறைத்துறை

**அரசின் அரசிறை**

01 சனவரி 2008

- கீழ்வரும் பொருட்களுக்கான பெறுமதிசேர் வரியானது 15 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.
  - பெற்றோல் இறக்குமதி அல்லது விநியோகம்
  - மின் இழை அல்லது படச்சுருள் தயாரிப்பிற்கான செயலிழந்த விளக்கு அலகுகள், புற ஊதா அல்லது அப்பால் சிவப்பு விளக்கு கரி என்பவற்றின் இறக்குமதி
- கீழ்வருபவை பெறுமதி சேர்வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.
  - கூட்டுறவு கிராமிய வங்கிகளால் மேற்கொள்ளப்படும் நிதியியல் பணிகள்
  - 1972ஆம் ஆண்டு 05ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களினால் மேற்கொள்ளப்படும் பொருட்கள் மற்றும் பணிகள் வழங்கல்.
  - தந்திரோபாய அபிவிருத்தித் திட்டங்கள் என அடையாளம் காணப்பட்ட எந்தத் திட்டங்களுக்கும் மற்றும் நாட்டிற்கு நன்மை பயக்கும் என நிதி அமைச்சினால் கருத்திற் கொள்ளப்பட்டு அடையாளப்படுத்தப்பட்ட குறிப்பிட்ட திட்டங்களிற்குமான பொருட்கள் மற்றும் பணிகளது வழங்கல் மற்றும் பொருட்களின் இறக்குமதி.
  - *"நெகனகிர உதானய"* நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் வரி விலக்கிற்கு தகுதியான வணிக நோக்கத்திற்கான நிறுவனங்களினால் இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்கள்.
  - உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட சீனி மற்றும் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பாலிலிருந்து தயாரிக்கப்படும் பால் உற்பத்திப் பொருட்களின் வழங்கல் மற்றும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அரிசியிலிருந்து தயாரிக்கப்படும் உற்பத்திகள்.
  - ஆடைக் கைத்தொழிலுக்காக இறக்குமதி செய்யப்படும் அல்லது வழங்கப்படும் நூலிழை
- சமூகப் பொறுப்பாண்மை வரி 1 சதவீதத்திலிருந்து 1.5 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது.
- கையடக்கத் தொலைபேசிகளுக்கு பொருந்தும் வகையில் விதிக்கப்பட்ட 10 சதவீத பாவனையாளர் வரி கம்பியல்லா தொலைபேசிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.
- பிரதேச உட்கட்டுமான அபிவிருத்தி வரியானது 2.5 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக அதிகரிக்கப்பட்டதுடன் சரக்குக் கொள்வனவு மற்றும் இயந்திர இயலளவின் மீது மோட்டார் வாகனங்களுக்கு விதிக்கப்பட்ட வரி 7.5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக அதிகரிக்கப்பட்டன.
- 2008 சனவரி 1இன் பின் மேற்கொள்ளப்பட்ட " *அப்பி வெனுவென் அப்பி* " நிதிக்கான நன்கொடையானது தகுதிபெறும் கொடுப்பனவுகளின் கீழ் ஒரு கழிவாக முழுமையாக அனுமதிக்கப்பட்டது.

| | |
|---|---|
| | - 1972ஆம் ஆண்டு 05ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது கிராமிய வங்கிகளினால் பராமரிக்கப்பட்டுவரும் நிலையான அல்லது சேமிப்புக் கணக்குகள் பற்று வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன. |
| | - “*அப்பி வெனுவென் அப்பி* ” நிதியினால் பராமரிக்கப்படும் நிலையான அல்லது சேமிப்புக் கணக்குகள் பற்று வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன. |
| | - 2006ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க முத்திரைத் தீர்வை(சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் எந்தவொரு பணம்/சொத்தையும் பெறும்போது அல்லது விற்கும்போது மற்றும் குடிவகையை விற்பதற்கான வியாபாரம் அல்லது வணிகத்தின் உரிமக் கட்டணங்கள் மீதான வீதங்கள் திருத்தியமைக்கப்பட்டன. |
| 14 மாச்சு 2008 | - சிகரெட்டுக்கள் மீதான கலால் தீர்வை அதிகரிக்கப்பட்டது. |
| 01 ஏப்பிறல் 2008 | - “*அப்பி வெனுவென் அப்பி* ” நிதியின் வங்கி வைப்புக்களினால் பெறப்படும் வட்டி உள்ளடங்கலாக எந்த வகையிலான இலாபம் மற்றும் வருமானங்கள் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. |
| | - 1972ஆம் ஆண்டு 05ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கிராமிய வங்கிகளின் இலாபங்கள் மற்றும் வருமானங்கள் 5 ஆண்டுகளுக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. |
| | - கூட்டுறவு கிராமிய வங்கிகள் உள்ளடங்களாக கூட்டுறவுச் சங்கங்கள் வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களிலான வைப்புக்கள் மீதான வட்டியானது பிடித்து வைத்தல் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. |
| | - வழங்கப்பட்ட வரிச்சலுகைகளின் மீது கீழ்வரும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. |
| | - “*நெகனகிர நவோதயாவின்* ” கீழான எந்த புதிய முதலீடுகளும் 2010 ஏப்பிரலிற்கு முன்னர் ரூபா 30 மில்லியன் முதலீட்டினை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இலாபம் மற்றும் வருமானங்களின் மீது 5 வருட காலத்திற்கு விலக்களிக்கப்பட்டது. |
| |   - பின் தங்கிய பிரதேசங்களில் புதிதாக ஆரம்பிக்கப்படும் (நிதி திட்டமிடல் அமைச்சினால் தீர்மானிக்கப்படும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய பிரதேசம்) இலாபங்கள் மற்றும் வருமானம் மீதான வருமான வரியிலிருந்து மூன்றாண்டுகள் விலக்களிக்கப்பட்டன. |
| |   - முதலீட்டுச்சபைச் சட்டம் மற்றும் உள்நாட்டு இறைவரிச் சட்டம் என்பவற்றின் கீழ் ஏற்கனவே வழங்கப்பட்டவரிச் சலுகைகள் காலாவதியானதன் பின்னர் மீளவும் வழங்கப்படமாட்டாது. |
| |   - 2008 ஏப்பிறல் 1 இன் பின் முதலீட்டுச் சபைச் சட்டம் அல்லது உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் ஆரம்பிக்கும் வரிச் சலுகைகள் மூன்றாண்டுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டதுடன் அந்த குறிப்பிட்ட மூன்றாண்டுகளையும் வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின்னரான இலாபத்தின் மீதான வரிகளானவை: முதலாண்டு 5 சதவீதம், இரண்டாமாண்டு 10 சதவீதம், மற்றும் மூன்றாமாண்டு 15 சதவீதம் |
| | - மூலவடிவில் இறக்குமதி செய்யப்பட்டு, வெட்டப்பட்டு பின்னர் பட்டை தீட்டப்படும் இரத்தினக்கல் ஏற்றுமதிக்கு பொருத்தப்படான வருமானவரி விலக்களிப்பானது இரத்தினக்கல் ஏற்றுமதியிலிருந்தான இலாபம் மற்றும் வருமானத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டது. |
| | - அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படும் ஏலங்களில் விற்கப்படும் இரத்தினக்கற்களின் பெறுமதியின் மீது 2.5 சதவீத வருமானவரி வசூலிக்கப்பட்டது. |
| | - இலங்கைக்கு வெளியே வதியும் ஆள் ஒருவருக்கு கம்பனி ஒன்றினால், பங்குடமை ஒன்றினால் அல்லது தனிப்பட்ட ஒருவரினால் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வழங்கப்படுகின்ற எந்தவொரு தொழில்சார், தொழில் மற்றும் பணிகளுக்கான வருவாய்களைப் பொறுத்தவரை, அத்தகைய வெளிநாட்டு வருவாய்கள் வங்கியொன்றினூடாக அனுப்பப்படும்போது வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன. |
| | - 2008 ஏப்பிறல் 1இன் பின் வதிவற்ற கம்பனி ஒன்றினால் வதிவுள்ள பங்குதாரர் ஒருவருக்கு வழங்கப்படும் எந்த பங்கு இலாபமும் அப் பங்கு இலாபம் ஒரு வங்கியினூடாக இலங்கைக்கு அனுப்பபடுமாயிருந்தால் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. |
| | - எந்தக் கம்பனியினாலும் தொழிலாளர் நல நோக்கில் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட பங்குகளின் மீது வழங்கப்பட்ட பங்கு இலாபம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தினால் பங்கு வழங்கல் ஏற்றுக் கொள்ளக்கூடியதொன்றாக கருதப்படுமானால் வருமான வரியில் இருந்து விலக்களிக்கப்பட்டது. |
| | - 2008 ஏப்பிறல் 1இன் பின் வதிவுடைய நபரொருவர் இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளும் முதலீட்டிலிருந்து பெறப்படும் வட்டியானது வங்கியொன்றினூடாக இலங்கைக்கு அனுப்பப்படும் பட்சத்தில் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. |
| | - எந்த வங்கியினாலும் வழங்கப்பட்ட கடன்களிலிருந்தும் பெறப்படும் வட்டி வருமானமானது குறிப்பிட்ட கடன் முழு-வதும் “ *நெகனகிர நவோதயாவின்* ” கீழ் ஒரு புதிய முயற்சியில் முதலிட்டு பெறப்பட்டதாக இருக்குமாயின் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. |
| | - நகர அபிவிருத்தி அதிகாரசபை அல்லது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான கட்டடவாக்கம் அல்லது வீட்டுமனைகளின் |

விற்பனையிலிருந்தான இலாபங்கள் மற்றும் வருமானம் என்பன நில அளவானது 500 சதுர அடிக்கு மேற்படாத வகையிலும் 2013 ஏப்பிறல் 1 இற்கு முன்னர் விற்பனை நடைபெறும் பட்சத்திலும் வருமான வரியில் இருந்து விலக்களிக்கப்பட்டது.

- இலங்கை அரசாங்கத்திற்கு, எந்தவொரு அரச கூட்டுத்தாபனங்களுக்கு, எந்தவொரு அரச நிறுவனங்களுக்கு அல்லது நிதித்திட்டமிடல் அமைச்சினால் அனுமதியளிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களுக்கு இயந்திரங்கள்/ உதிரிப்பாகங்களை வழங்குவதன் மூலம் இலங்கைக்கு வெளியே உள்ள எந்த கம்பனியினாலும் ஈட்டிக் கொள்ளப்படும் இலாபங்கள் மற்றும் வருமானங்கள் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- இலங்கையில் தொழில் புரியும் வதிவற்ற தனி நபரினால் இலங்கைக்கு வெளியில் இருந்து ஈட்டப்பட்ட அல்லது பெறப்பட்ட இலாபங்கள் அல்லது வருமானம் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- வருமானவரி பொறுப்பைப் பொறுத்தவரை பிரசாவுரிமையற்ற தொழிலாளர்கள் பிரசாவுரிமையுடைய தொழிலாளர்களுக்கு சமனாக நடத்தப்படும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.
- வான் கப்பலோட்டல் சட்டத்தின் கீழ் அனுமதிபெற்ற எந்த விமான சேவைகளினதும் இலங்கை விமான ஓட்டிகளினது தொழிலிருந்தான வருமான வரியானது 20 சதவீதத்தினை விஞ்சாத வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.
- கப்பல்களுக்கான 33 1/3 சதவீத மூலதன மேலதிகக் கொடுப்பனவு கப்பல் உரிமையாளருக்கு மட்டும் அனுமதிக்கப்பட்டது.
- குத்தகையினால் ஏற்படும் எந்த இழப்புக்களும் குத்தகை வியாபாரத்தின மூலம் பெறப்படும் இலாபங்களின் மூலம் மட்டுமே சரி செய்வதற்கு அனுமதிக்கப்பட்டது.
- மூத்த பிரசைகளினால் கூட்டுறவுச் சங்கங்களில் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்களிலிருந்து வட்டி வருமானத்தில் ரூ.200,000 வரையில் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- பொருளாதார சேவைகள் கட்டணத்திற்கு பதிவு செய்திருக்கும் எந்தவொரு ஆளும்/ பங்குடைமையும் அவர்கள் குறிப்பிட்ட கட்டணங்கள், வாடகை, குத்தகை அல்லது அது போன்ற ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் வேத்துரிமை, வருடாந்த கொடுப்பனவு, முகாமைத்துவக் கட்டணம் அல்லது அதுபோன்ற கொடுப்பனவுகளிற்கான பிடித்து வைத்திருக்கும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.
- உயர் தொழில்நுட்ப திரையரங்குகளை கட்டுதல் அல்லது தற்போதைய திரையரங்குகளை உயர்தொழில்நுட்பத்துடன் நவீனமயப்படுத்துவதற்கு தலா ரூ.25 மில்லியன் மற்றும் ரூ.10 மில்லியன் தகுதிகாண் கொடுப்பனவு வழங்கப்பட்டது. மேலும் திரைப்பட உற்பத்திக்கான தகுதிகாண் கொடுப்பனவானது ரூ.25 மில்லியனில் இருந்து ரூ.35 மில்லியனாக அதிகரிக்கப்பட்டது.
- தனியார் வருமான வரியின் மீது விதிக்கப்பட்ட சமூகப் பொறுப்பாண்மை வரி நீக்கப்பட்டது.
- பொருளாதார சமூகக் கட்டணத்தின்மீது கீழ்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.
  - எந்தவொரு வியாபாரத்தினதும் புரள்வு ஏற்றுமதியை அல்லது வெளிநாட்டு வருவாய்களை உள்ளடக்கியிருக்குமாயின் பொருளாதார சமூகப் பணிக்கட்டணம் 0.25 சதவீதமாக மட்டுப்படுத்தப்பட்டது.
  - கொள்வனவு அலுவலகங்களினூடாக தைத்த ஆடைகளின் ஏற்றுமதிக்கான பொருளாதார சமூகக் கட்டணம் 0.1 சதவீதமாகும்.
  - வெறியக் குடிவகைகள் மற்றும் மோட்டார் வாகனங்களின் விற்பனை மீதான பொருளாார சமூகக் கட்டணம் 0.5 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது.
  - வெளிநாட்டுச் செலாவணி தொடர்புபடாத அடிப்படையில் மூல வடிவில் இறக்குமதி செய்யப்பட்டு, வெட்டப்பட்டு, பட்டை தீட்டப்பட்டு ஏற்றுமதி செய்யப்படும் இரத்தினக் கற்களைப் பொறுத்தவரை பொருளாதார சமூகப் பணிக்கட்டனமானது ஒன்றில் பொருட்களின் பெறுமதியில் 0.25 சதவிதமாகவோ அல்லது பெறுமதி கூட்டப்பட்ட பெறுமதியில் 0.1 சதவீதமாகவோ இருக்கும்.
- தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புபட்ட பயிற்சி நிலையங்கள், கல்வி நிலையங்கள் மற்றும் வெளி மூலங்களிலிருந்து அலுவலர்களைப் பெற்றுக் கொள்ளும் தொழில்கள் என்பனவற்றில் ஐ.அ.டொலர்கள் 2 மில்லியனுக்குக் குறைவில்லாமல் முதலிடும் வெளிநாட்டவர்களுக்கு நிலமாற்று வரியிலிருந்து விலக்களிப்பு வழங்கப்பட்டது.

22 ஏப்பிறல் 2008 - வானூர்தி மற்றும் கப்பல்களின் உறுதிப்பத்திரங்களின் ஈடு மீதான முத்திரை வரி விலக்களிக்கப்பட்டது.

15 செத்தெம்பர் 2008 - சிகரெட்டுக்கள் மீதான கலால் வரியானது அதிகரிக்கப்பட்டது.

08 ஒத்தோபர் 2008 - உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை இயந்திரங்களுக்கு பெறுமதி கூட்டப்பட்ட வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

01 ஒத்தோபர் 2008 - வன் வெறியக்குடிவகைகளின் மீதான கலால்வரி லீற்றர் ஒன்றிற்கு ரூ.57 இனாலும் வடிகட்டிய வெறியக் குடிவகைகளின் மீதான கலால் வரி லீற்றர் ஒன்றிற்கு ரூ.10 இனாலும் அதிகரிக்கப்பட்டது.

21 ஒத்தோபர் 2008 - இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட எந்தவொரு வெளிநாட்டு நாணயத்திலும் குறித்துரைக்கப்பட்ட நாட்டிற்கான முறிகளின் விற்பனையிலிருந்து எழும் வியாபார இலாபம் மற்றும் வருமானத்திற்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

30 திசெம்பர் 2008 - திரவப் பெற்றோலிய வாயுவின் மீது 5 சதவீதமான அல்லது கிலோகிறாமொன்றுக்கு ரூபா 8 இலான கலால் தீர்வை விதிக்கப்பட்டது.

31 திசெம்பர் 2008 - சிகரெட்டுக்கள் மீதான கலால் தீர்வை அதிகரிக்கப்பட்டது.

01 சனவரி 2009 - வங்கியியல் மற்றும் நிதியியல்துறை தவிர்ந்த, இறக்குமதிகள், உற்பத்தி அல்லது பணிகள் என்பவற்றின் புரள்வின்மீது 1 சதவீத தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி விதிக்கப்பட்டது.

- பெறுமதிசேர் வரி நியம வீதம் 15 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.
- பெறுமதிசேர் வரியின் கீழ் மட்டம் வரி விதிப்புக்குரிய காலமொன்றுக்கு ரூபா 650,000க்கு அல்லது ஆண்டொன்றுக்கு ரூபா 2.5 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.
- விருப்பத் தேர்வு பெறுமதிசேர் வரிக்குப் பதிவு செய்வதற்கான பெறுமதிசேர் வரி கீழ் மட்டம் ரூபா 3 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது
- உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட சத்திர சிகிச்சைகளுக்குப் பயன்படும் சத்திர சிகிச்சை கையுறைகள் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.
- ஆடம்பர வீதமான 20 சதவீதத்தில் செலுத்தப்பட்ட பெறுமதிசேர் வரியின் உள்ளீட்டு வரியைக் கோருவதற்கான தகைமை 15 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.
- சமூகப் பங்களிப்பினூடாக நிறைவேற்றப்பட்ட கமநகும, மகநகும என்பவற்றுடன் தொடர்புபட்ட கட்டட வேலைகள் மற்றும் சமூக நீர்ப்பாசனத் திட்டங்கள் என்பவற்றுக்கு பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- செல்லிட மற்றும் கம்பியல்லா தொலைபேசிகளுக்கு நடைமுறையிலிருந்த 10 சதவீத தொலைபேசி வரி நிலையான இணைப்புள்ள தொலைபேசிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.
- பயங்கரவாத நடவடிக்கைகளால் அழிக்கப்பட்ட பேரூந்துக்களைப் பதிலீடு செய்வதற்காக 09 யூலை 2008இல் அல்லது அதற்குப் பின்னர் இறக்குமதி செய்யப்படும் பேரூந்துக்களுக்கு பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- தேசிய கைப்பணிச் சபையால் இறக்குமதி செய்யப்படும் பித்தளைத்தகடு, பித்தளை வார்ப்புக் கட்டி, நூல், வண்ணச் சாயங்கள், பரபின் மெழுகு மற்றும் அவலரக்கு (செலாக்) எனபவற்றுக்கு பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- தெரிவு செய்யப்பட்ட சிலவகை சூரிய ஒளியைப் பயன்படுத்தும் சாதனங்கள் மற்றும் சூரிய சக்தி வலுவை உருவாக்குவதற்கான சாதனங்கள் என்பவற்றின் இறக்குமதிகள் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.
- மின் பிறப்பாக்கத்திற்காக இலங்கை மின்சபைக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படும் இரசாயனம் நப்தாவின் இறக்குமதி பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- பொருட்களின் இறக்குமதிகளுடன் தொடர்புபட்ட சுங்கப்படுத்தல் மீதான உள்ளீட்டு வரி வரவுகளுக்கான பெறுமதிசேர் வரிக் கோரிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த காலப்பகுதி 2 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டது.

**அடுத்து வருபவை**

01 ஏப்பிறல் 2009 - திருத்தப்படும் தனியார் வருமான வரியின் வீதங்கள் கீழ்வருமாறு

| | |
|---|---|
| (1) ரூபா 300,000 வரை - இல்லை | (2) அடுத்த ரூபா 400,000 - 5 சதவீதம் |
| (3) அடுத்த ரூபா 400,000 - 10 சதவீதம் | (4) அடுத்த ரூபா 400,000 - 15 சதவீதம் |
| (5) அடுத்த ரூபா 500,000 - 20 சதவீதம் | (6) அடுத்த ரூபா 500,000 - 25 சதவீதம் |
| (7) அடுத்த ரூபா 500,000 - 30 சதவீதம் | (8) மீதி - 35 சதவீதம் |

- வைப்புக்கள் மீதான வட்டியின் மீதான பிடித்து வைத்தல் வரியின் திருத்தப்படும் வீதங்கள் கீழ்வருமாறு
  - (1) ரூபா 300,000 வரை - இல்லை
  - (2) ரூபா 300,001 - ரூபா 1000,000 - 2.5 சதவீதம்
  - (3) ரூபா 1000,001 உம் அதற்கு மேலும் - 10 சதவீதம்
- அரசாங்க நிறுவனங்களின் ஊழியர்களுக்கு லேடி லாகூர் கடன் நிதியத்தால் வழங்கப்பட்ட கடன்களின் மீதான வட்டி வருமானத்திற்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- புத்தக விற்பனை மூலம் எழுத்தாளருக்குக் கிடைக்கும் இலாபத்திற்கும் நாடகமொன்றை மேடையேற்றுவதன் மூலம் தயாரிப்பாளருக்குக் கிடைக்கும் இலாபத்திற்கும் புத்தகம் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து அல்லது நாடகம் மேடையேற்றப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்கு வருமான வரியிலிருந்து 50 சதவீதம் விலக்களிக்கப்பட்டது.
- பாடலொன்றின் ஒலிப்பரப்பின்போது அல்லது ஒளிபரப்பின்போது பாடகருக்குக் கிடைக்கும் வேத்துரிமைப் பங்கிற்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- 7 வருட காலத்திற்குத் தரமுயர்த்தப்படும் சினிமாத்துறைக்கு 5 வருடங்களுக்கு வருமானவரி ஊக்குவிப்பு நீடிக்கப்பட்டது.
- இலங்கையை அடிப்படையாகக் கொண்ட பங்குடைமை அல்லது நிறுவனமொன்றில் வேலை செய்யும் தொழில்சார் நிபுணர் ஒருவரின் கொடுப்பனவு வெளிநாட்டு நாணயத்தில் மேற்கொள்ளப்படும்போது அத் தொழிலிருந்தான இலாபத்தின்மீது 20 சதவீத வரி அறவிடப்பட்டது.

- உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் தொடர்பான ஏற்பாடுகளின் கீழ் வருமானவரி செலுத்த வேண்டியிருந்த கம்பனிகளின் மீது சமூகப் பொறுப்பான்மை வரி பிரயோகிக்கப்பட்டது.
- உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 153ஆம் பிரிவின்கீழ் வருமான வரியைப் பிடித்து வைத்திருக்கும் நேரத்தில் கட்டடக் கைத்தொழிலில் ஈடுபட்ட நபர்களிடமிருந்து கட்டடக் கைத்தொழில் உத்தரவாத நிதி தீர்வையைச் சேகரிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- பாரிய வணிகங்களுக்கான வருடாந்த ஆகக் கூடுதலான சமூகப் பொறுப்பாண்மைப் பொறுப்பு ரூபா 60 மில்லியன் ரூபா 120 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.
- ஒரு பொதிக்கு 15 சதவீதத்திற்கு மேற்படாத வகையில், ஒரு பொதியில் 1 கிலோகிறாமைவிட மேற்படாத நிறையைக் கொண்டிருக்கும் தேயிலைப் பொதிகளின் ஏற்றுமதியின் மீதான இலாபத்தின் மீதான வருமான வரி குறைக்கப்பட்டது.

**அரச செலவினம்**

01 யூலை 2008 - மாதாந்த சம்பளம் ரூ.22,000 இற்குக் குறைவாக பெற்றுக் கொள்ளும் அரச ஊழியர்களுக்கு ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட ரூ.375 இற்கு மேலதிகமாக ரூ.625 வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்பட்டது.

18 யூலை 2008 - வாழ்க்கைச் செலவுப்படி போன்ற மேலதிகக் கொடுப்பனவிற்கு முன்னர் உள்ளடக்கப்படாத அரச கூட்டுத்தாபனங்கள், நியாய சபைகள் மற்றும் பூரண உரிமையுடைய அரச நிறுவனங்கள் என்பவற்றிற்கு வாழ்க்கைச் செலவுப்படி விரிவுபடுத்தப்பட்டது.

11 நவெம்பர் 2008 - 11 நவெம்பர் 2008 இலிருந்து செயற்பாட்டுக்கு வரும் வகையில் 2008இன் எஞ்சிய காலப்பகுதியில் அரச செலவினத்தைக் குறைப்பதற்காக பின்வரும் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- நவெம்பர் வரை ஆரம்பிக்கப்படாத அனைத்து வழங்கல்கள் மற்றும் பணிகளையும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் முடக்கி வைத்தல்
- நவெம்பர் வரை ஆரம்பிக்கப்படாத அனைத்து கட்டுமாணங்கள் மற்றும் இயந்திரம், உபகரணம் மற்றும் வாகனங்கள் உட்பட மூலதனப் பொருட்களின் கொள்வனவை நிறுத்துதல்.
- மீண்டெழும் செலவினங்கள்மீது மேலதிக கடப்பாடுகள் எதனையும் உருவாக்காதிருத்தல்.
- ஏனைய அனைத்து மீண்டெழும் மற்றும் மூலதனம் மீது தோன்றும் செலவினங்களைப் பிற்போடல்

30 திசெம்பர் 2008 - உலகளாவிய பொருளாதார நிதியியல் நெருக்கடியிலிருந்து பொருளாதாரத்தின் மீதான தாக்கத்தைக் குறைக்கும் நோக்கில் ரூபா 16 பில்லியன் பெறுமதியான மதிப்பிடப்பட்ட செலவில் பொருளாதார தூண்டல் பொதியொன்று அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது.

01 சனவரி 2009 - அரசதுறை ஊழியர்களுக்கான வாழ்க்கைப்படிச் செலவு மாதமொன்றுக்கு ரூபா 1000ஆல் அதிகரிக்கப்பட்டது.

- ஓய்வூதியர்களுக்கான வாழ்க்கைச்செலவுப்படி ரூபா 560 ஆன மாதாந்த அதிகரிப்புடன் ரூபா 2000 ஆல் அதிகரிக்கப்பட்டது.

**படுகடன் முகாமைத்துவம்**

06 மே 2008 - வெளிநின்ற திறைசேரி உண்டியல்களில் 10 சதவீதத்திற்கு மேற்படாத அளவில் இலங்கையில் வதியாத இலங்கையர்கள், வெளிநாட்டு பிரசைகள், இலங்கைக்கு வெளியே செயற்படும் கம்பனிகள் மற்றும் வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் திறைசேரி உண்டியல்களில் வெளிநாட்டு முதலீட்டினை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

23 மே 2008 - ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளின் வெளிநாட்டு முதலீட்டின் மீதான தகுதிக்குரிய பிரமாணம், வெளிநாட்டு நாணய நிதிகள், சமவாய நிதிகள் மற்றும் பிராந்திய நிதியங்கள் என்பவற்றையும் உள்ளடக்குவதன்மூலம் திருத்தப்படுகின்றது.

08 திசெம்பர் 2008 - திறைசேரி உண்டியல்கள் மீது பிரயோகிக்கத்தக்க நியதி எல்லையானது ரூபா 375 பில்லியனிலிருந்து ரூபா 500 பில்லியனுக்கு பாராளுமன்றத்தால் அதிகரிக்கப்பட்டது.

01 சனவரி 2009 - முதனிலை வணிகர்கள் மற்றும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளால் பொதுவாகப் பயன்படுத்தக்கூடிய முதன்மை மீள்கொள்வனவு ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

09 சனவரி 2009 - இலங்கையிலிருந்து புலம் பெயாந்தோர் மற்றும் மற்றும் அயல் நாட்டில் புலம் பெயர்ந்த தொழிற்படைக்காக ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிச்சந்தை திறந்து வைக்கப்பட்டது.

**அடுத்து வருபவை**

2009 - முதனிலை வணிகர்களை பல்வகைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாவது கட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

## நிதியியல்துறை

| | | |
|---|---|---|
| 01 சனவரி 2008 | - | பாசல் II இன் கீழ் வர்த்தக வங்கிகள், கடன் இடர்நேர்வுக்கு தரப்படுத்தப்பட்ட அணுகு முறையினையையும் சந்தை இடர்நேர்வுக்கு தரப்படுத்தப்பட்ட அளவீட்டு முறையினையும் மற்றும் செயற்பாட்டு இடர்நேர்வுக்கு அடிப்படைக் குறிகாட்டி அணுகுமுறையினையும் பிரயோகிக்கும்படி வேண்டப்பட்டன. |
| 22 பெப்புருவரி 2008 | - | மத்திய வங்கியானது குறிப்பிட்ட வங்கிகளுக்கான நேர்மாற்று மீள் கொள்வனவு வசதியினை புழக்கத்திலுள்ள மத்தியவங்கி நேர்மாற்று மீள் கொள்வனவு வீதத்தில் (கொள்கை வட்டி வீதம்) மாதத்தில் 3 தடவைகளுக்கு மட்டும் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் மட்டுப்படுத்தியதுடன் திரவத் தன்மை பற்றாக்குறை அல்லது திரவத் தன்மை நலிவடைந்து காணப்படும்போது இந்த வசதியானது மேற்குறிப்பிடப்பட்டதற்கு மேலதிகமாக தண்ட வட்டி வீதமாக 19 சதவீதத்திற்குக் காணப்பட்டது. |
| 10 மாச்சு 2008 | - | சிறிலங்கா சேவிங்ஸ்பாங் லிமிடெட் செயற்பாடுகளை ஆரம்பித்தது. |
| 31 மாச்சு 2008 | - | பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் செலவினையும் அதன் மூலம் வழங்கல் வீதத்தினையும் குறைப்பதற்காக வட்டிவீத எல்லையினை ஒடுக்குவதற்காக வைப்புக்களின்மீது பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகளினால் வழங்கப்படக்கூடிய கட்டணத்தினைக் குறைப்பதற்காக பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது. |
| 23 ஏப்பிறல் 2008 | - | புதிய பணிப்புரைகளுக்கு வங்கிகள் சுமுகமாக மாறிச் செல்வதற்கு மேலும் வசதி அளிக்கும் நோக்குடன், மாறிச் செல்லும் ஏற்பாடுகளை விரிவுபடுத்துவதற்காக 2007 திசெம்பரில் வழங்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான ஆளுகை மீதான பணிப்புரையின் மீது திருத்தமொன்று செய்யப்பட்டது. |
| 08 மே 2008 | - | வங்கிகளின் கடன் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை மேலும் பலப்படுத்தும் நோக்குடன் பல புதிய ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டு கடன்கள் மற்றும் முற் கொடுப்பனவுகளின் பாகுபடுத்தல், வருமானத்தினை அடையாளம் காணல் மற்றும் ஏற்பாடுகளை மேற்கொள்ளல் என்பவற்றின் மீது ஒரு திருத்தப்பட்ட பணிப்புரை வழங்கப்பட்டது. |
| 26 மே 2008 | - | அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் கிளைகளை நிறுவுவது தொடர்பாக புதிய கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி வங்கிகள் மேல் மாகாணத்தில் ஒரு புதிய கிளையினை நிறுவும் போதும் மேல் மாகாணத்திற்கு அப்பால் குறைந்தது இரண்டு கிளைகளை நிறுவ வேண்டும். |
| 29 மே 2008 | - | 2011 சனவரி 1 அன்று முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தவதற்கான பன்னாட்டுக் கணக்கீட்டு நியமத்திற்கான வழிகாட்டியானது வங்கிகள் பன்னாட்டுக் கணக்கீட்டு நியமத்தினை 2011இலிருந்து முழு அளவில் பயன்படுத்துவதுடன் 2008 யூன் முதல் இணையாக செயற்படுத்திவரும் வகையில் வழங்கப்பட்டது. |
| 15 ஓகத்து 2008 | - | 2008 ஏப்பிறல் 23அன்று வழங்கப்பட்ட வங்கிகளுக்கான கூட்டிணை ஆளுகை மீதான பணிப்புரையில் உயர் நீதிமன்றத்தினால் 2008 யூலை 8ஆம் நாளன்று வழங்கப்பட்ட கட்டளைகளின் ஏற்பாடுகளை உள்ளடக்கும் விதத்தில் ஒரு திருத்தம் மேற்கொள்ளப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 18 ஓகத்து 2008 | - | நீண்டகாலமாக மீட்கமுடியாமலிருந்த லங்கா செட்டில் பிரயோக முறையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான மாற்றீட்டு முறையான தனியாள் கணனி அடிப்படையிலான கொடுப்பனவு மற்றும் பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையை அறிமுகப்படுத்துவதற்காக லங்கா செட்டில் முறைமையின் விதிகள் திருத்தப்பட்டன. |
| 20 ஓகத்து 2008 | - | இலங்கை மத்திய வங்கியானது 2007 இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நாட்டுக்கான பன்னாட்டுக் கடன் பிணையங்களில் அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் இரண்டாம் தரச் சந்தையில் முதலீடு செய்வதற்கு அனுமதியளித்தது. |
| 05 செத்தெம்பர் 2008 | - | உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் 2009ஆம் ஆண்டுக்கான வருடாந்த உரிமக் கட்டணம் முறையே ரூபா 500,000க்கும் ரூபா 200,000க்கும் அதிகரிக்கப்பட்டது. |
| 25 செத்தெம்பர் 2008 | - | 1998ஆம் ஆண்டு 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தினை மீறும் வகையில் நிதி தொடர்பான வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் மூன்று கம்பனிகள் மற்றும் தனிப்பட்ட நபர்கள் நாணயச்சபையினால் பெயரிடப்பட்டன. |
| 02 ஒத்தோபர் 2008 | - | மத்திய வங்கியானது குறிப்பிட்ட வங்கியொன்றிற்கான நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகள் கிடைப்பனவினை மத்திய வங்கியில் நடைமுறையிலுள்ள நேர்மாற்றுமீள் கொள்வனவு வீதத்திற்கு (கொள்கை வட்டி வீதம்) பெற்றுக் கொள்ளக் கூடியதாக ஒரு நாட்காட்டி மாதத்தில் மூன்று (03) தடவையிலிருந்து ஆறு(06) தடவையாக அதிகரித்தது. |
| 03 ஒத்தோபர் 2008 | - | முழுமையாக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவம் மீதான வழிகாட்டல்களின் வரைபு வங்கித்துறைக்கு அவர்களின் அபிப்பிராயத்தையும் ஆலோசனையையும் பெறுவதற்காக வழங்கப்பட்டது. |
| 08 ஒத்தோபர் 2008 | - | வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு அங்கீகாரமளிக்கப்படாத நபர்கள் மற்றும் நிறுவனங்களால் வங்கி முறையினூடாக எழக்கூடிய இடர்நேர்வைக் குறைப்பதற்காக வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல் மற்றும் உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் நடைமுறைகளை உறுதிப்படுத்துவதற்குரிய சிறப்புக் கவனம் செலுத்தும்படி வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. |
| 10 ஒத்தோபர் 2008 | - | வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவ செயற்பாடுகளை முன்னேற்றும் பொருட்டு வங்கித்தொழில் துறையின் கலந்தாலோசனையுடன் வங்கிகளுக்கு வெளிமூலங்களிலிருந்து ஆட்களை பெற்றுக் கொள்வது தொடர்பில் வழிகாட்டல்களின் வரைவு ஒன்று வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 15 ஒத்தோபர் 2008 | - | மத்திய வங்கியானது குறிப்பிட்ட வங்கியொன்றிற்கான நேர்மாற்று மீள் கொள்வனவு வசதியின் கிடைப்பனவினை மத்திய வங்கியின் நடைமுறையிலுள்ள நேர்மாற்று மீள் கொள்வனவு வீதத்தில் (கொள்கை வட்டிவீதம்) பெற்றுக் கொள்ளக் கூடியதாக ஒரு நாட்காட்டி மாதத்தில் ஆறு (06) தடவையிலிருந்து பத்து (10) தடவையாக அதிகரித்தது. |
| | - | காசோலை பிரதிமைகள் மற்றும் தகவல்களை அதே நேரத்தில் லங்கா கிளியருக்கு பரிமாற்றும் நேரடி இணைப்பினை நோக்கி நகர்வதற்கு முன்னரான இடைக்கால ஏற்பாடாக காசோலைகளைச் சேகரிக்கும் வங்கி அக்காசோலையின் பிரதிமைகளை இறுவட்டு வடிவில் சமர்பிக்கும் முறைமைக்கு மாற்றுவதற்கான காலக்கெடுவை உறுதிப்படுத்தி (மேல் மாகாணத்திற்கு 31 மார்ச் 2009 ஏனைய அனைத்து மாகாணங்களுக்கும் 30 யூன் 2009) காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறையிலுள்ள அனைத்து பங்குபற்றும் நிறுவனங்களுக்கும் சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது. |
| 17 ஒத்தோபர் 2008 | - | மத்திய வங்கியானது நியதிச்சட்ட ஒதுக்கு விகிதத்தினை 10 சதவீதத்திலிருந்து 9.25 சதவீதமாக 0.75 அடிப்படைப் புள்ளிகளினால் குறைத்தது. |
| 29 ஒத்தோபர் 2008 | - | அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையின் தரமுயர்த்தல்கள் மற்றும் முன்னேற்றங்கள் காரணமாக அதன் முடிவுறுத்தும் நேரம் 15 நிமிடங்களால் முன்னோக்கித்திருத்தப்பட்டது. இதன்படி 03 நவெம்பர் 2008 இலிருந்து அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் முடிவுறுத்தும் நேரம் பி.ப. 5.00 ஆகும். |
| 31 ஒத்தோபர் 2008 | - | ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணங்கள் நிபந்தனையின் கீழ் இறக்குமதி செய்யப்படும் தெரிவு செய்யப்பட்ட பொருட்கள் மீது வைப்புத் தேவைப்பாடு விதிக்கப்பட்டது. வங்கிகளும் வெளிநாட்டு நாணயமாற்று விற்பனைக்கான முன்னோக்கிய ஒப்பந்தங்களின் பெறுமதியில் 100 சதவீதத்திற்குக் குறையாத வைப்பொன்றைப் பெறுவதற்குக் கேட்டுக் கொள்ளப்பட்டன. |
| 06 நவெம்பர் 2008 | - | பொதுமக்கள் பொருட்களின் தன்மை மற்றும் செயற்றிறன்மிக்க பொருத்தமான வட்டிவீதங்கள் என்பவற்றை தெளிவாக அறிந்துகொள்ளும் பொருட்டு பிழையாக வழிநடத்தக்கூடிய மற்றும் உண்மைக்குப் புறம்பான விளம்பரங்களை வெளியிடுவதிலிருந்து விலகியிருக்குமாறு வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. |
| 28 நவெம்பர் 2008 | - | மத்திய வங்கி சட்டப்படியான ஒதுக்குத் தேவையை 150 அடிப்படைப் புள்ளிகளால் 9.25 சதவீதத்திலிருந்து 7.75 சதவீதத்திற்குக் குறைத்தது. |
| 05 திசெம்பர் 2008 | - | ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையினுள் இருக்கும் உறுப்பு நாடுகள் தமக்குள் கொடுக்கல் வாங்கல்களை ஐக்கிய அமெரிக்க டொலரிலோ அன்றி யூரோவிலோ மேற்கொள்வதற்கு அனுமதியளிக்கும் முகமாக 01 சனவரி 2009இலிருந்து செயற்பாட்டுக்கு வரும் வகையில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய ஒப்பந்தம் மற்றும் நடைமுறை விதிகள் என்பன திருத்தியமைக்கப்பட்டன. |
| | - | மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீதான நாணயக் கடிதத்தை திறப்பதற்கான வைப்புத் தேவைப்பாடானது 100 சதவீதத்திலிருந்து 200 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 29 திசெம்பர் 2008 | - | இலங்கை வங்கியால் நியமிக்கப்பட்ட புதிய நிர்வாக சபைப் பணிப்பாளர்களின் கீழ் செலான் வங்கியின் வியாபாரத்தை எடுத்து நடாத்துவதற்கு இலங்கை வங்கி மத்திய வங்கியால் நியமிக்கப்பட்டது. |
| 31 திசெம்பர் 2008 | - | நிதிக் கம்பனிகள் (கம்பனி ஆளுகை - திருத்தம்) 2008இன் பணிப்புரை இல 4 வெளியிடப்பட்டது. |
| 30 சனவரி 2009 | - | உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகளின் பின்னடைவையும் சுற்றுலாத்துறை மீதான அவற்றின் தாக்கத்தையும் கருதி சுற்றுலாத்துறையிலிருக்கும் நிறுவனங்களுக்கு சலுகைகளை வழங்குமாறு வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. |
| 11 பெப்புருவரி 2009 | - | மத்திய வங்கியின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்கள் 25 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 10.25 சதவீதத்திற்கும் 11.75 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. |
| | - | நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களின் மீது அறவிடப்பட்ட வட்டியின் தண்டவீதம் 50 அடிப்படைப் புள்ளிகளால் 16.50 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| 27 பெப்பருவரி 2008 | - | மத்திய வங்கி சட்டப்படியான ஒதுக்குத் தேவையை 75 அடிப்படைப் புள்ளிகளால் 7.75 சதவீதத்திலிருந்து 7.00 சதவீதத்திற்குக் குறைத்தது. |
| 18 மார்ச்சு 2008 | - | நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களின் மீது அறவிடப்பட்ட வட்டியின் மீதான தண்டவீதம், 175 அடிப்படைப் புள்ளிகளால் 14.75 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| | - | மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீதான நாணயக் கடிதத்தைத் திறப்பதற்கான வைப்புத் தேவைப்பாடானது மீண்டும் பழைய நிலைக்கு 200 சதவீதத்திலிருந்து 100 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| | - | ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணங்களின் மீதான நியதிகளின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட தெரிந்தெடுக்கப்பட்ட பண்டங்களின்மீது விதிக்கப்பட்ட 100 சதவீத அளவுத் தேவைப்பாடு நீக்கப்பட்டது. |

அடுத்து வருபவை

- வங்கிகளுக்கான ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்தவக் கட்டமைப்பின் நடைமுறைப்படுத்தல்.
- முதிர்ச்சி இடைவெளி பகுப்பாய்வைத் திரட்டுவதற்கான வழிகாட்டல்களை வழங்கல் மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சித் தேவைப்பாடுகளின் இடைவெளிகளில் காணப்படும் எதிர்க்கணிய பொருத்தப்பாடின்மைகள் மீதான ஒழுங்குமுறை வரையறைகளை அறிமுகப்படுத்தல்.
- பாசல் II இன் கட்டம் II இற்கான வழிகாட்டல்களின் வரைவை ஆரம்பித்தல்
- கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பான வங்கிச் சட்டத்தின் பகுதி IX ஐ (பிரிவுகள் 72 இலிருந்து 76) முழுதாக நடைமுறைப்படுத்தல்
- ஒன்றிணைந்த மேற்பார்வைக்கான கட்டமைப்பை முறைப்படுத்தல்
- இடர்நேர்வுகளைக் கண்டறிவதற்காகவும் முன்னதாக எச்சரிக்கை செய்யும் சமிக்கைகளை வழங்குவதற்காகவும் வங்கிகளின் தர மாதிரியொன்றை அறிமுகப்படுத்தல்.
- நிதியியல் சாதனங்கள் தொடர்பான புதிய கணக்கீட்டு நியமங்களை (இலங்கைக் கணக்கீட்டு நியமம் 44 மற்றும் 45) பின்பற்றுவதற்கு வங்கித் தொழிலை தயார்படுத்தும் நடவடிக்கையைத் தொடர்தல்.